REPORTING SECTION

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

திங்கட்கிழமை, 1979 மார்ச் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம்.

*குறுகிய கால வினா எண். 6—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு வேளாண்மை–பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில் இத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி உண்டா? எவ்வளவு?

(இ) மாநில அரசின் பங்கென்ன?

(ஈ) இத்திட்டம் எத்தனை ஆண்டுகளாக செயல்படுகிறது? எந்த ஆண்டுவரை செயல்படும்?

(உ) மொத்த ஊழியர்கள் எத்தனை? தற்பொழுது ஊழியர்கள் யாராவது பாதிக்கப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் மாநில அரசு அனுப்பும் களப்பணியாளர்கள் நீங்கலாக மத்திய அரசின் முழு நிதியுதவி பெறும் மத்திய துறைத் திட்டம். மத்திய அரசு ஐந்தாம் திட்ட காலத்திற்கு உச்சவரை மானியமாக ஒதுக்கியுள்ள தொகை ரூ. 15.50 கோடி.

(இ) மாநில அரசு முகவரமைப்புகளுக்கு அனுப்பும் களப் பணியாளர்களுக்காக ஆகும் செலவினை ஏற்றுக் கொள்கிறது.

[திரு. ப. குழந்தைவேலு] [1979 மார்ச் 5

(ஈ) இத்திட்டம் நான்காவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இருந்து தென்னார்காடு, வடார்க்காடு, திருநெல்வேலி, மதுரை, சேலம் ஆகிய 5 மாவட்டங்களிலும் தஞ்சை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஐந்தாவது திட்டக்காலத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. இதத்திட்டம் நடப்பு ஆண்டுடன் 1978-79 முடியுமென்றும் மத்திய அரசிடமிருந்து செப்டம்பர் 78-ல் ஓர் குறிப்பு வந்துள்ளது. 1978-79-க்கும் மேல் இத்திட்டம் செயல்படுமா இல்லையா என்று மத்திய அரசிடமிருந்து திட்டவட்டமான செயற் குறிப்பு எதுவும் இதுவரை வரவில்லை.

(உ) மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 829. இவர்களில் களப்பணி ஊழியர்கள் 625. இவர்களில் யாரும் வேலை நீக்கம் செய்யப்படவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்போது இந்த ஆண்டுடன் முடியும் என்று சொன்னார்கள். மத்திய அரசு, தொடருமா என்பது பற்றி தகவல் இல்லையென்று சொன்னார்கள். இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு? எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது? ஆகவே, பணம் மீதமிருந்தால் அடுத்த ஆண்டும் தொடர்ந்து நீடிக்க அரசாங்கம் முன் வருமா என்பதுபற்றி தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒதுக்கப்பட்ட பணம் ஏற்கனவே என்னுடைய பதிலிலே விடை ஆ-வில் சொல்லியிருக்கிறேன் ரூ. 15·50 கோடி என்று. இதற்காக இதுவரையிலும் செலவிடப்பட்ட தொகை, பேரவைத் தலைவரவர்களே, அதற்குண்டான குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, தனியாகக் கேட்டால், நான் சொல்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்தச் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தினை இயக்குவதற்காக குழு ஏதேனும் நியமிக்கப்பட்டிருக்கிறதா? அப்படி குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தால் அதனுடைய தலைவர் யார் என்று அறிவிக்க முடியுமா? அதைப் போலவே எந்த எந்த வகையான உழவர்கள்-சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்—எவ்வளவு ஏக்கா நன்செய், புன்செய் நிலங்கள் உள்ளவர்கள்—அத்தகைய உழவர்கள்—பயன் அடைகிறார்கள் என்பதனை அறிவிக்க இயலுமா?

1979 மார்ச் 5]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய விவசாயிகள் எனப்படுவோர்களுக்கு இதிலே ஒரு 'டெஃபனிஷன்' கொடுக்கப்பட்டிருக்கிறது. 5 ஏக்கர் புனசெய் நிலமும் அல்லது $2\frac{1}{2}$ ஏக்கர் நன்செய் நிலமும் வைத்திருக்கிறவர்கள் சிறிய விவசாயிகள் என்றும் அதற்குக் கீழ் வைத்திருக்கிறவர்கள் குறுநில விவசாயிகள் என்றும் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்திலே கோடிட்டு, குறியிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த அரசைப் பொறுத்தவரையிலே, கடந்த 1974 முதல் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் அமுலில் இருந்தாலும், அதற்குப் பின்பு இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தான இதிலே ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் செலவிடப் பட வேண்டுமென்ற எண்ணத்துடன் வருகிற 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாளுக்குள் ஏறத்தாழ ரூ. 50 கோடியை செலவழிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நாங்கள் பாடுபட்டு வருகிறோம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏறகனவே 1979-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 3-ம் நாளன்று வேளாண்மை இணைச் செயலாளர் அவர்கள் ஒரு கடிதத்திலே இந்த ஊழியர்கள் அனைவரையும் வேறு வேலைக்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படலாம், அல்லது வேலை, இழப்பு ஏற்படலாம் என்று மெமோரண்டம் போட்டிருக்கிறார்கள். அந்த ஊழியர்கள் பாதிக்கப்படாமலிருக்க, அவர்களுக்கு வேலை வாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டுமென்று அந்த ஊழியர்களிடமிருந்து அரசுக்கு ஏதாவது மெமோரண்டம் வந்திருக்கிறதா? அதன் மீது அரசு ஏதாவது முடிவு எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இது மாதிரியான—எந்த மாதிரியான—கோரிக்கையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. ஆனாலும், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்—5 ஆண்டுக் காலம்—முடிவடைந்தாலும் அதற்குப் பின்னாடி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்ற ஐ.ஆர்.டி.பி. திட்டம் வருகிற காரணத்தாலே இந்தத் திட்டத்தை மீண்டும் இந்த ஆண்டுக்கு நீட்டிக்க வேண்டுமென்றும் நாம் ஏற்கனவே மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆதலால், எந்த அலுவலரும் இதன் மூலம் பாதிக்கப்பட மாட்டார்கள் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம், மாண்புமிகு அமைச்சரவர்களின் பதிலிலிருந்து தர்மபுரி மாவட்டத்தில் இயங்கவில்லை என்று தெரிகிறது. தர்மபுரி மாவட்டத்தில் 85 சதவீதம் சிறு உழவர்கள் இருப்பதால் இந்த மாவட்டத்திலும் இந்தத் திட்டத்தை விஸ்தரித்துச் செயல்படுத்துகின்ற அறிவிப்பைச் செய்வார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1979 மார்ச்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவ ரவர்களே, தமிழகத்திலே இரண்டு மாவட்டங்களைத் தவிர பாக்கி யிருக்கும் எல்லா மாவட்டங்களும் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தில் அடங்கியிருக்கின்றன. இரண்டு மாவட்டங்கள், வறட்சிக்கு இலக்கான பகுதித் திட்டம் என்று இராமநாதபுரம் மாவட்டமும், தர்மபுரி மாவட்டமும் எடுத்துக் கொள்ளப்பட்டு, வறட்சிக்கு இலக்கான மாவட்டம், டி.பி.ஏ.பி., என்ற அடிப் படையிலே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆறு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, அதன் மூலம் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் என்னென்ன சலுகைகளைக் கொடுக்கி றோமோ அந்தச் சலுகைகள் அந்தத் திட்டத்தின் வாயிலாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், தர்மபுரி மாவட்டத்திற்கும் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சிறு விவசாயிகள் எங்கு அதிகமாக இருக்கிறார்களோ, அங்கு, குறிப்பாக தர்மபுரி மாவட்டம் என்றால் தர்மபுரி மாவட்டத்து விவசாயக் காரியங் களுக்காகத் தொகைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒதுக்கிய தொகை, மத்திய அரசு ஒதுக்கிய 15½ கோடி ரூபாயை மாநில அரசு முழுமை யாகப் பயன்படுத்தவில்லை என்று சொல்லும் நிலைமை அமைச்ச ருக்குத் தெரியுமா? இதற்குப் பிரதான காரணம், அவர்கள் கொடுக்கின்ற மானியத்திற்கு ஈடாக 75 சதவீதம் கடனாகக் கொடுத்தால்தான் அந்தத் தொகையை முழுவதும் செலவழிக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. அப்படிக் கடன் கொடுப்ப தற்கு எந்தவிதமான ஏற்பாட்டையோ, உத்தரவாதத்தையோ தமிழக அரசு செய்யாததன் காரணமாக, மத்திய அரசு ஒதுக்கிய 15½ கோடி ரூபாயை முழுமையாகப் பயன்படுத்த முடியாமல் போய் விட்டது என்பதை மனதில் வைத்துக்கொண்டு, வரக்கூடிய ஒருங் கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தில் முழுமையாகப் பயன் படுத்துவதற்கு நம்முடைய அரசு ஏற்பாட்டைச் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர் களே, சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தில் 15½ கோடி ரூபாய் மானியமாகக் கொடுப்பதற்கு நமக்கு இலக்கு அளித்து மத்திய அரசு ஆணையிட்டிருந்தாலும்கூட, 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி வரையில் ஏறக்குறைய 853 இலட்சத்து 95,000 ரூபாய்தான் அவர்களே கொடுத்திருக்கின்றார்கள். ஆகவே சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தை உறுதியாகச் செயல்படுத்த வேண்டுமென்று மத்திய அரசும் இதற்குச் சரியாக நிதி ஒதுக்கீடுகளை நமக்குக் கொடுக்காததன் காரண மாகவும் பணம் ஒழுங்காக எல்லோர்க்கும் போய்ச் சேரவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. ஆனால், ஐந்தாண்டுகளில் செல

1979 மார்ச் 5] [திரு. ப. குழந்தைவேலு]

வழிக்க வேண்டும் என்ற இலக்கை வைத்துக்கொண்டு நாம் செய்திருக்க வேண்டும். 1974-லே இருந்து 1979 முடிய 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி முடிய இந்த 15½ கோடி ரூபாய் மானியத்தைச் செலவிட்டிருந்தால் ஏறக்குறைய 50 கோடி ரூபாயை நாம் முழுவதும் தமிழகத்திலே இருக்கக்கூடிய சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியவர்களுக்குக் கொடுத்திருக்க முடியும். ஆனால், இந்த அரசு, பொறுப்பேற்ற பிறகுதான் இந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக நாம் இதிலே தீவிர முயற்சி எடுத்து, கவனம் எடுத்துக்கொண்டு பாடுபட்டு வருவதால் சிறு விவசாயிகளுக்கு ஓரளவுக்கு நாம், நன்மை செய்ய முடிகிறது. மேலும், வங்கிகளின் மூலம் கடன் கொடுக்கும் நேரத்தில் ''ரீபேயிங் கெபாசிட்டி'' இருக்கிறதா என்பதைத்தான் அவர்கள் அதிகமாகப் பார்க்கிறார்கள். இவை களையெல்லாம் பார்த்துக் கொடுப்பதன் மூலம் இதிலே தாமதம் ஏற்படுகிறது. தாமதம் ஏற்படுகிற காரணத்தால் ஒழுங்காக நாம் இலக்கு வைத்திருக்கும் நேரத்திற்குள் கொடுக்கப்பட முடியாத நிலைமை இருக்கிறது. இவைகளையெல்லாம் தீர்த்து வைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் தமிழக அரசு பாடுபட்டு வருகிறது.

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள்.

*வினா எண் 218— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் தனியார் நிறுவனங்களில் பணிபுரிய அரசு அனுமதிக்க உத்தேசித்துள்ளதா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

பேரவை முன் ஓர் விவர *அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 9-10]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அத்தகைய ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு எந்த எந்த வகையில் அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) ; பேரவைத் தலைவரவர்களே, அரசின்கீழ் அவர் வகித்து வந்த பதவி காரணமாக அடைந்த அறிவு அல்லது அனுபவம், உத்தேசத் தொழிலதிபருக்கு நியாயமற்ற வகையில் அனுகூலமளிக்கப் பயன்

[* 367-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.]